# IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI

**OS. No.** 136/2012 **Date**: 28.11.2023

**PW**1 – ஆனந்தன்

சாட்சி மீண்டும் முன்னிலையானதன் பேரில் 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

தாவா 1 வது அயிட்ட சொத்து 08.06.1954 ல் என் தாயார் கிரையம் வாங்கியது என்றால் சரிதான். அந்த கிரையத்தை என் தாயார் என் அப்பாவிடம் இருந்து தான் வாங்கினார் என்றால் சரிதான். தாவா 1 வது அயிட்ட சொத்து கூட்டு குடும்ப சொத்தாக தான் அனுபவிக்கப்பட்டு வந்தது என்றால் சரியல்ல. 1981 ல் என் அப்பா தனியாக சொத்து கிரையம் வாங்கினார் என்றால் சரிதான். 09.02.1984 ல் 6 ம் பிரதிவாதியின் தகப்பனார் சின்னதம்பிக்கு நானும், என் அம்மா, அப்பா ஆகியோரும் சேர்ந்து கிரையம் செய்து கொடுத்தோம். அது 1954 ல் என் தாயார் கிரையம் வாங்கிய சொத்தில் ஒரு பகுதி என்றால் சரிதான். அந்த சொத்து கூட்டு குடும்ப சொத்து என்பதால் தான் நாங்கள் அனைவரும் சேர்ந்து கையொப்பம் செய்தோம் என்றால் சரியல்ல. 29.01.2012 ல் 3 ம் பிரதிவாதி பெயரில் என் தந்தை கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்றால் சரிதான். 15.02.1999 ல் ஆனந்தனுக்கு எழுதி கொடுத்த கிரையத்தை நானும் என் தகப்பனாரும், குடும்பத்தாரும் சேர்ந்து எழுதி கொடுத்தோம் என்றால் சரிதான். மேற்கண்ட கிரையத்தின் படி கிரையம் வாங்கியவர்கள் கிரைய சொத்துக்களை தனிதனியாக அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரிதான். 30 வருடங்களுக்கு முன்பு வாய்மொழியாக பாகம் பிரித்து அனுபவித்து வந்ததன் அடிப்படையில் தான் கிரையம் செய்து அவர்கள் அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரிதான். அதனால் ஏற்கனவே பாகபிரிவினையான சொத்தை மீண்டும் பாகபிரிவினை செய்ய வேண்டிய அவசியம் இல்லை என்றாலும் எங்களுக்குள் உள்ள கருத்து வேறுபாட்டால் இத்தாவாவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

Sd/-ஆனந்தன்

Sd/-திரு.ந.பன்னீர்செல்வம்,
சார்பு நீதிபதி, சங்ககிரி.